# கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

## குடியாத்தம்- 635803

# 19-ஆம் ஆண்டு
# விளையாட்டு விழா

## 2018-2019

## தேதி : 02.02.2019

# கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## குடியாத்தம்

# 19-ஆம் ஆண்டு விளையாட்டு விழா

## 2018-2019

கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உயர்திரு. தலைவர் அவர்களே, மேலாண்மை அறங்காவலர் அவர்களே, கல்லூரியின் செயலாளர் மற்றும் கல்லூரியின் பொருளாளர் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை புரிந்துள்ள **முன்னாள் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.அ.நாகராஜன்** அவர்களே, கல்லூரி இயக்குநர் அவர்களே, கல்லூரி முதல்வர் அவர்களே, கல்லூரி இருபால் பேராசிரியப் பெருமக்களே மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களே, கல்லூரியின் ஊன்று கோலாக விளங்கி கொண்டிருக்கும் மாணவ, மாணவிகளே பல் துறையில் பயின்று கொண்டிருந்தாலும் விளையாட்டு துறையில் ஆர்வம் கொண்டு விளையாட்டுக்கு பெருமை சேர்க்கும் மாணவ, மாணவிகளே, ஊடக துறை நண்பர்களே மற்றும் வருகை புரிந்துள்ள விருந்தினர்களே அனைவருக்கும் மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2018-2019ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தலில் பெருமிதம் கொள்கிறேன். கல்வியாண்டின் துவக்கத்திலேயே விளையாட்டு வீரர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அதற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு இவ்வாண்டின் விளையாட்டுத் துறையின் நடவடிக்கைகள் துவங்கப்பட்டன.

குழுக்களும் அவற்றின் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | குழுவின் பெயர் | பொறுப்பு பேராசிரியர்கள் | பிரதிநிதிகள் |
|---|---|---|---|
| 1. | நீல குழு | பேரா.G.D. சர்மிளா கரோலின் வணிக ஆள்முறையியல் துறை | P. சோபன்பாபு - முதுநிலை முதலாமாண்டு வணிகவியல் துறை<br>B. பிரியங்கா - இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை |
| 2. | பச்சை குழு | பேரா.V.ரேணு உயிர்வேதியியல் துறை | K. பவிஷ் - இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் கணினி பயன்பாட்டியல் துறை<br>B. இந்துமதி - இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை |
| 3. | வெள்ளை குழு | பேரா.K.S. கருணா வணிக கணினி பயன்பாட்டியல் துறை | K. சந்தோஷ் - இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை<br>D. ஹேமலதா - இளநிலை மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறை |
| 4. | மஞ்சள் குழு | பேரா.V. இரமேஷ் தமிழ்த் துறை | V. தியாகராஜன் - இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியல் துறை<br>C. சோனியா - இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை |

விளையாட்டுத்துறை செயலாளர்களாக ஜி. கணேஷ் இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல், எஸ்..சுகாஷினி இளநிலை மூன்றாமாண்டு வேதியியல் துறை மற்றும் எஸ்.கீர்த்திவாசன், முதலாமாண்டு முதுநிலை தகவல் தொழில் நுட்பவியல் துறை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

விளையாட்டுத்துறையில் 2018-2019 ஆம் ஆண்டு நம் மாணவர்கள் படைத்த சாதனைகளைப் பட்டியலிடுவதில் மகிழ்ச்சியுடன் பெருமையும் கொள்கிறேன்.

**தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- திரு.கே.பவிஷ் இளநிலை மூன்றாமாண்டு வணிக கணினி பயன்பாட்டியல் துறைச் சார்ந்த மாணவர் திருப்பதியில் உள்ள வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென்மண்டல பல்கலைக்கழக அளவிலான கோ-கோ போட்டியில் பங்கேற்றார்.
- திரு.வி.தினேஷ் இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல் துறையைச் சார்ந்த மாணவர் விசாகப்பட்டினத்தில் உள்ள கீத்தம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென்மண்டல பல்கலைக்கழக அளவிலான மேசைப்பந்து போட்டியில் பங்கேற்றார்.

**அனைத்து கல்லூரிகளுக்கான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- கோ-கோ, கபாடி, இறகுபந்து, மேசைபந்து, கூடைபந்து, கிரிக்கெட், குத்துசண்டை, தடகளம், வலுதூக்குதல், பளுதூக்குதல் ஆகிய போட்டிகளில் நம் கல்லூரி அணிகள் பங்கேற்றன.

**மண்டல அளவிலான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- திரு.பி.சோபன்பாபு முதுநிலை முதலாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கிடையேயான இறகு பந்து போட்டியில் பங்கேற்றார்.
- திரு.கே.கார்த்திகேயன் இளநிலை முதலாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் திருப்பத்தூரில் உள்ள தூய நெஞ்ச கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கிடையேயான கையுந்து பந்து போட்டியில் பங்கேற்றார்.
- செல்வி. சி.சோனியா இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவி கடலூரில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கு இடையேயான கோ-கோ போட்டியில் பங்கேற்றார்.
- செல்வி. ஆர்.லாவண்யா இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவி வேலூரில் உள்ள ஆக்ஸிலியம் கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கிடையேயான இறகு பந்து போட்டியில் பங்கேற்றார்.

- திரு.பி.சோபன்பாபு முதுநிலை முதலாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் குடியாத்ததில் உள்ள அரசு திருமகள் ஆலைக் கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார்.
- விருதாசலத்தில் உள்ள B.J.P. கல்லூரியில் மண்டல அளவில் நடைபெற்ற குத்துச் சண்டை போட்டிகளில் கீழ்காணும் நம் மாணவர்கள் வெற்றி பெற்றனர்.
  - ✓ திரு.ஜி.யுவராஜ் -இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை - வெள்ளி பதக்கம்
  - ✓ கே.யுகேந்திரபிரசாத்- இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் - வெண்கல பதக்கம்
  - ✓ ஆர்.பேரரசு - இளநிலை முதலாமாண்டு வணிக கணினி பயன்பாட்டியல் - வெண்கல பதக்கம்
- வேலூரில் உள்ள சி.எம்.சி பாகாயம் விளையாட்டரங்கில் மண்டல அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் கீழ்காணும் மாணவர்கள் வெற்றி பெற்றனர்.
- திரு.ஆர். உதயகுமார் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை - நீளம் தாண்டுதல் போட்டியில் இரண்டாமிடம் மற்றும் மும்முறை தாண்டுதலில் மூன்றாமிடம்.
- டி.விக்ரம் இளநிலை முதலாமாண்டு வணிக நிர்வாகவியல் - கோலூண்டு தாண்டுதலில் இரண்டாமிடம்.
- ஜி.கணேஷ் இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் - கோலூண்டு தாண்டுதலில் மூன்றாமிடம்.
- எஸ்.ஜெகதீஷ் இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் - 5000 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாமிடம்.
- பி.மோகன்ராஜ் இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் - அரை மாரத்தான் ஓட்டத்தில் மூன்றாமிடம்.

**வெளி வளாகத்தில் நடைபெறும் போட்டிகளில் நம் மாணவர்கள் பங்கு :**

- திரு.டி.விக்ரம் இளநிலை வணிக நிர்வாகவியல் துறையைச் சார்ந்த மாணவர் வேலூரில் உள்ள சி.எம்.சி பாகாயம் விளையாட்டரங்கில், மாவட்ட அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் நீளம் தாண்டுதலில் இரண்டாமிடம் பெற்றார் மற்றும் எஸ்.ஜெகதீஷ் இளநிலை கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்நத மாணவர் 5000 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாமிடமும் பெற்றார்.
- திரு.கே.உதயகுமார் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் வேலூரில் உள்ள நேதாஜி விளையாட்டரங்கில் மாவட்ட அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் நீளம் தாண்டுதலில் முதலிடம் பெற்று சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் மாநில அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் பங்கேற்றார்.

**<u>நம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற போட்டிகள் :</u>**

பிற கல்லூரிகள் நம் வளாகத்தைப் பயன்படுத்தி விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் நாம் அனுமதி வழங்கியுள்ளோம்.

இந்த ஆண்டின் விளையாட்டு விழாவை ஒட்டி கீழ்க்காணும் போட்டிகள் நடைபெற்றன. கைப்பந்து, கூடைப்பந்து, கோ-கோ, கபாடி, பூப்பந்து, இறகுப்பந்து, கிரிக்கெட், சதுரங்கம், கேரம் மற்றும் தடகளப் போட்டிகள் மாணவர்களுக்கும், பந்து எறிதல், கேரம், சதுரங்கம், கோ-கோ, இறகுப்பந்து, கூடைப்பந்து மற்றும் தடகள போட்டிகள் மாணவிகளுக்கும் நடத்தப்பெற்றன.

போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் பெற்ற வெற்றி புள்ளிகள் அனைத்தும் அவர்கள் சார்ந்துள்ள விளையாட்டு குழுவிற்கு வழங்கப்பட்டு அதிக புள்ளிகள் எடுத்த மஞ்சள் குழுவை இவ்வாண்டின் விளையாட்டு வெற்றிக்குழுவாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை......432......

இவ்விளையாட்டுப் போட்டிகளில், நம் மாணவர் பெற்ற வெற்றி அனைத்திற்கும் தூண்டு கோலாகவும், வழிகாட்டியாகவும், வெளிச்சமாகவும் திகழும் நம் கல்லூரியின் மேலாண்மை அறங்காவலர், தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு விளையாட்டுத் துறைச் சார்பாகவும், இயக்குநர் மற்றும் முதல்வரின் சார்பாகவும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்போட்டிகள் சிறப்பாக நடைபெற எல்லா வகையிலும் உதவிய இக்கல்லூரியின் இயக்குநர் மற்றும் முதல்வருக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன். மாணவர் நலனில் இவர்கள் காட்டும் ஈடுபாடே, எந்த இடையூறும் இன்றி இவ்வாண்டின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறவும் வழிகோலியது.

விளையாட்டிற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய பேராசிரியப் பெருமக்களுக்கும், போட்டிகளை நடத்துவதில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்விழாவின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

| | | |
|---|---|---|
| சிறப்பு விருந்தினர் | தலைவர் | செயலர் |
| இயக்குநர் | முதல்வர் | உடற்கல்வி இயக்குநர் |